


24.05.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு நாளை நடைபெறும் 6ஆவது கட்ட தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

2. ஏழாவது இறுதி கட்ட மக்களவை தேர்தலுக்கான பரப்புரையில் அரசியல் கட்சி தலைவர்கள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

3. தமிழ்நாட்டில் வரும் 6 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

4. வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுபகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுப்பெற்றது.

5. மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழு

6ஆவது கட்ட தேர்தல்

மக்களவைக்கு நாளை நடைபெறும் 6ஆவது கட்ட தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 58 மக்களவை தொகுதிகளுக்கு நடைபெறும் இந்த தேர்தல் காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

பிஜேபி மூத்த தலைவர் தர்மேந்திர பிரதான், மேனகா காந்தி, மனோஜ் திவாரி மற்றும் காங்கிரஸ் கட்சியின் ராஜ்பாபர்,

சமாஜ்வாதி கட்சியின் தர்மேந்திர யாதவ்,

மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெஹ்பூபா முஃப்தி உட்பட 889 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தல் அமைதியாகவும், சுமூகமாகவும் நடைபெற அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் 7ஆவது இறுதி கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

ஹிமாச்சல பிரதேச மாநிலம் ஷிம்லாவில் இன்று பரப்புரையில் ஈடுபட்ட பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி 5 கட்ட தேர்தல்கள் நிறைவடைந்த நிலையில், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் காலத்தில் ஆட்சியில் இருந்த பலவீனமான அரசு பாகிஸ்தானுக்கு எதிராக உலக நாடுகளிடம் உதவி கோரியதாக கூறிய அவர், ஆனால் பிஜேபி அரசு எத்தகைய சவாலையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு எதிரிகளின் இருப்பிடத்திற்கே சென்று தாக்குதலை நடத்தியதாக குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே தமது சமூக வலைதள பதிவில் நாட்டிற்கே உணவு வழங்கும் விவசாயிகளுக்கு காங்கிரஸ் கட்சி எப்போதுமே முன்னுரிமை அளித்ததாக குறிப்பிட்டார்.

பசுமை புரட்சியையும், வெண்மை புரட்சியையும் காங்கிரஸ் கொண்டுவந்ததாக கூறிய அவர் 16 ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் தலைமையிலான அப்போதைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 72 ஆயிரம் கோடி ரூபாய் வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ததாக குறிப்பிட்டார்.

காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் 15 கோடி விவசாய குடும்பங்கள் பயன்பெறும் 5 உத்தரவாதங்கள் உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பகுஜன் சமாஜ்கட்சி, ராஷ்டிரிய ஜனதாதள், இடது சாரி கட்சிகள் உள்ளிட்டவையும் தத்தம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பேரணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மூமூமூமூமூமூமூமூமூ

வாக்கு எண்ணிக்கை

7 கட்ட தேர்தல் வாக்குகளும் வரும் 4 ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

வாக்கு எண்ணிக்கைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றன.

நாடுமுழுவதும் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

அஜித்தோவல்

எல்லை பாதுகாப்பு படையின் 21ஆவது எழுச்சி தின விழா புதுதில்லி விஞ்ஞான் பவனில் இன்று நடைபெற்றது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவல் இதில் பங்கேற்று எல்லை பாதுகாப்பில் சிறப்பாக செயலாற்றிய படை வீரர்களுக்கு வீர தீர காவலர் விருதுகளை வழங்கினார்.

உள்துறை செயலர் திரு.அஜய் குமார் பல்லா,

புலனாய்வு பிரிவு மற்றும் எல்லை பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

மனோஜ் பாண்டே

புனேயில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்பு படை பயிற்சி நிறுவனத்தில் 146ஆவது படைப்பிரிவினரின் அணிவகுப்பை ராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே இன்று பார்வையிட்டார்.

கடற்படை மற்றும் விமான படை பிரிவில் 132 பேர் மூன்றாண்டு பி.டெக் பயிற்சியை நிறைவு செய்துள்ள நிலையில், கண்ணூர் எழிமலை கடற்படை பயிற்சி நிறுவனம் மற்றும் ஹைதராபாத் விமான படை நிறுவனத்தில் மேலும் ஓராண்டு சிறப்பு பயிற்சிகளை இவர்கள் பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

நிலச்சரிவு

பப்புவா நியூ கினியா நாட்டில் இன்று நேரிட்ட நிலச்சரிவில் 100 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் வடக்கு பகுதியில் உள்ள வளர்ந்து வரும் நாடான பப்புவா நியூகினியா விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பள்ளி திறப்பு

தமிழ்நாட்டில் கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளிகள் வரும் 6 ஆம் தேதி திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

1 முதல் 12ஆம் வகுப்பு மாணாக்கருக்கு அன்றைய தினம் பள்ளிகள் திறக்கப்படுவதோடு, பாட புத்தகங்கங்களும் அன்றே வழங்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

எனவே அன்றைய தினம் பள்ளிகளை தொடங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சிவதாஸ் மீனா

தமிழ்நாட்டில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக தலைமை செயலர் திரு.சிவ்தாஸ் மீனா இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மழைக்காலங்களில் மருத்துவ திட்டங்களை செயல்படுத்துவது மருத்துவமனைகளின் தயார்நிலை, பேரிடர் காலங்களை சமாளிப்பது உள்ளிட்டவை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

குடும்ப அட்டை

தமிழ்நாட்டில் 2 லட்சம் பேர் புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மக்களவை தேர்தல் முடிவுகள் வெளியாகி நடத்தை விதிமுறைகள் திரும்ப பெறப்பட்டவுடன் இவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

எடப்பாடி

முல்லை பெரியாறு அணைக்கு மாற்றாக புதிய அணை கட்ட முயற்சிக்கும் கேரள அரசின் நடவடிக்கையை தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தினார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் சட்ட நடவடிக்கைகள் மூலம் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

முல்லை பெரியாறு அணையில் பேபி அணையை பலப்படுத்தி 152 அடி வரை தண்ணீரை தேக்கிவைக்க தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ராமதாஸ்

தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டத்தை தடுப்பதற்கான வழிமுறைகளை கண்டறிந்து அதனை நடைமுறைப்படுத்த மாநில அரசு முன்வர வேண்டும் என்று பா.ம.க.நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தினார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் ஆன் லைன் சூதாட்டத்தால் இளைஞர்கள் தற்கொலை நிகழ்வுகள் அதிகரித்து வருவது குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சிம்ஸ் பூங்கா

நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 64-ஆவது பழக்கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா இன்று தொடங்கிவைத்தார்.

இப்பூங்கா உருவாக்கப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவை குறிக்கும் வகையில் 150 வகை கனிகளால் வடிவமைக்கப்பட்ட உருவங்கள் இதில் காட்சிபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுபகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுப்பெற்றுள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி முதல் கன்னியாகுமரி வரையிலான மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வாய்ஸ்

இதனிடையே தூத்துக்குடி, நாகை, பாம்பன், எண்ணூர், கடலூர் துறைமுகங்களில் 1ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

குமரிக்கடல் மன்னார் வளைகுடா தென் தமிழக கடலோர பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றுமுதல் வரும் 28ஆம் தேதிவரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழு

குற்றாலம்

குற்றால அருவிகளில் ஒரு வாரத்திற்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று அனுமதி அளிக்கப்பட்ட நிலையில் அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் 6ஆவது நாளாகவும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீடிக்கிறது.

ஈரோடு கொடிவேரி அணையில் நீர்வரத்து சீரடைந்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டம் பவானி சாகர் அணையின் நீர்மட்டம் இன்று ஒரேநாளில் 4 அடி உயர்ந்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் பள்ளி மாணாக்கருக்கான வருமான, இருப்பிட, முதல்பட்டதாரி மற்றும் சாதி சான்றிதழ்களை அந்தந்த பள்ளிகளிலேயே பெற்றுக்கொள்ளுவதற்கான முகாம் இன்று நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளையோர்கள் முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதிற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கற்பகம் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தை அடுத்த கூகலூர் பகுதியில் ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பது குறித்து விவசாயிகளுக்கான செயல்முறை விளக்கம் இடம்பெற்றது.

வேளாண் கல்லூரி மாணாக்கரும், உயர் அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பி.வி.சிந்து

கோலாலம்பூரில் நடைபெறும் மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு பி.வி.சிந்து, முன்னேறியுள்ளார்.

காலிறுதியில் இன்று அவர் சீனாவின் ர்யபெ லுரந-வை 21-13 14-21 21-12 என்ற செட்களில் வென்றார்.

நாளை நடைபெறும் அரையிறுதியில் சிந்து - தாய்லாந்து வீராங்கனை டீரளயயெெ-ஐ எதிர்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

வில்வித்தை

தென்கொரியா யச்சியோனில் நடைபெறும் சர்வதேச வில்வித்தை 2ஆவது கட்ட கலப்பு குழு போட்டியின் இறுதி சுற்றுக்கு இந்தியாவின் ஜோதி சுரேகாவும், பிரியான்ஷ் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

நாளை நடைபெறும் இறுதிபோட்டியில் இவ்விருவரும் அமெரிக்க இணையை எதிர்கொள்கின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழு